**செய்தி வெளியீடு எண் : 1377** **நாள் : 20.12.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

சென்னையில் சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டத்தின் கீழ் இணை ஆணையர், சென்னை நுண்ணறிவுப் பிரிவு –1 ன் மேற்பார்வையில் நடைபெற்ற ஆய்வின் அடிப்படையில் மேற்கொண்ட விசாரணையில் சில போலி வணிகர்கள் மூலம் வடசென்னையில் இரும்பு வணிகம் செய்து வரும் பயனாளிகள் ரூபாய் 2.19 கோடி அளவுக்கு உள்ளீட்டு வரிவரவை துய்த்தது தெரிய வந்தது. அதனைத் தொடர்ந்து அவர்களது 9 வங்கிக் கணக்குகள் வணிகவரித் துறையால் கண்டறியப்பட்டு அக்கணக்குகளை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வணிக வரி ஆணையர் அவர்களால் சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டம் பிரிவு–83ன் கீழ் தற்காலிக முடக்கம் செய்யப்பட்டது. விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேலும், வணிகர்கள் யாராயினும் போலி வணிகர்களிடமிருந்து உள்ளீட்டு வரிவரவு பெற்றது தெரியவந்தால் சரக்கு மற்றும் சேவை வரிச்சட்டத்தின் கீழ் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட்டு கைது செய்யப்படுவார்கள் என வணிக வரித்துறை தெரிவித்துள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**